1971 ஜூலை 2]

திரு. கே. டி. கே. தங்கமணி : தமிழகத்தைப் பொறுத்தவரையில் பேராவூரணியில் இருந்து புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரம், கோயில்பட்டி தாலுகா வரை தொடர்ந்து வறண்ட பிரதேசங்களாகவே இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட 1,750 குழாய்க் கிணறுகளை முதலில் இந்தப் பகுதிகளில் ஆரம்பிக்க திட்டம் இருக்கிறதா ? எந்த இடங்களில் முதலில் இந்தப் பணியைத் துவங்குவது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 11—2—1971 அன்று தான் கோட்டம் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. திருச்சி, சேலம், மதுரை ஆகிய இடங்களில் கோட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. திருச்சியில் அமைக்கப்படும் கோட்டத்தில் உள்ள பணியாளர்களும், அலுவலர்களும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் அத்தகைய பகுதிகளை ஆராய்ந்து எந்தெந்த இடங்களில் குழாய்க் கிணறுகளை இறக்க முடியும் என்ற திட்டத்தை ஆராய்ந்து அனுப்பிய பிறகு எந்தெந்த வகையில் நிறைவேற்றப்படும் என்று குறிப்பாகத் தகவல் தர முடியும். அவர்கள் அது பற்றித் தெரிவித்த பிறகுதான் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

Kothawall Market.

*109 Q.—Thiru B. VENKATASAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to shift the Kothawall Market in Madras to some other place; and

(b) if so, when it will be done?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

Dr. H. V. HANDE : Is it not a fact that even a few years ago this Kothawall bazaar had been properly examined by the previous Government and also the Government had come to some decision as to the reorganisation of the whole thing, if not shifting it elsewhere? Is it not a fact that hygienic conditions there are very bad and that the persons who are conducting their business are finding it difficult, and also there is a lot of traffic obstruction? May I know from the Hon. Minister whether any survey or investigation has been made in this regard, if it is not going to be shifted, what steps are the Government taking to improve the conditions there, whether alternative steps are going to be taken by this Government at least to relieve the suffering of the people there?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது கொத்தவால்சாவடி கன்னிகா பரமேஸ்வரி அறநிலையப் பொறுப்பாட்சிக் குழுவின் மேற்பார்வையில் இருக்கிறது. தனியார் துறைதான்

கொத்தவால்சாவடியை நிர்வகித்து வருகிறார்கள். ஆகவே, அதை வேறு இடத்திற்கு மாற்றுவது என்பதை மேற்கொள்ள முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போன்று நெருக்கடியைத் தவிர்க்க வேண்டுமென்ற வகையில், போக்குவரத்தைச் சுலபமாக ஆக்க வேண்டுமென்ற வகையில் பரவலாக சென்னையின் பல்வேறு பகுதிகளில் பெரிய, பெரிய மார்க்கெட்டுகளை ஏற்படுத்துவதன் மூலம் இந்தப் பகுதிகளில் ஏற்படக்கூடிய நெருக்கடியைத் தவிர்க்க முடியும். அந்த வகையில் வட சென்னையில் ஜூலைக்கு அருகே கேசவப் பிள்ளை பூங்கா பகுதியில் 40 லட்சம் ரூபாய் செலவில் மொத்த வியாபாரிகளுக்கும், சில்லரை வியாபாரிகளுக்கும் மார்க்கெட் கட்டப்பட இருக்கிறது. அரசு 20 லட்சம் ரூபாய் செலவு செய்ய அனுமதித்து இருக்கிறது. மீதியை கார்ப்பரேஷன் ஏற்றுக் கொள்ளும் வகையில் திட்டமிடப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAN : Has the market construction started in Kesava Pillai Park, and is there any proposal to construct a similar market in South Madras because of the expansion of the Madras City and the huge crowd that has to go to the Kesava Pillai Park market? Is there any proposal to decentralise the wholesale market and construct one somewhere in the centre of South Madras?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கேசவப் பிள்ளை மார்க்கெட் கட்ட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக 20 லட்ச ரூபாய் செலவு செய்ய அரசு அனுமதியளித்திருக்கிறது. தென் சென்னையிலும் அப்படிப்பட்ட ஒரு மார்க்கெட் அமைக்க வேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது. அதற்கான இடத்தைத் தேடும் முயற்சியில் மாநகராட்சியினர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : There was a proposal to start one at Arumbakkam. If any such market is started in the outskirts of the City, it will relieve the congestion of the lorry traffic in the City. Therefore, will the Government take quick steps to do it.?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் கூற முடியும்.

புத்தூர் சீனிவாசா சுப்பராயா பல்தொழில் பயிற்சிப்பள்ளி.

*** 110 திரு. எஸ். வடிவேல் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி அருகே அமைந்துள்ள புத்தூர் சீனிவாசா சுப்பராயா பாலிடெக்னிக்கை அரசு எடுத்துக்கொள்ளும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆமெனில், எப்போது?